# சொர்க்கத்தையும் நரகத்தையும் உணர்த்துவோம்!

வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்! 12

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

எங்கள் அலுவலகத்தில் சிறிய மர வேலை. வந்திருந்த கார்பென்டர் எனக்கு ஏற்கெனவே அறிமுகம். சென்ற வருடம் எங்கள் நிறுவனத்தில் சில மாற்றங்கள் செய்தோம். அப்போது மரவேலை முழுவதையும் அவர்தான் செய்துகொடுத்திருந்தார். அப்போது அவர் மகன் பிளஸ் 2 முடித்திருந்தார். மேற்படிப்புக்கு எங்கே சேர்க்கலாம் என என்னிடம் ஆலோசனை கேட்டு, ஒரு தனியார் கல்லூரியில் பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் சேர்த்தார்.

அதன்பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். மகன் படிப்பு பற்றி விசாரித்தேன். சிரித்துக்கொண்டே ''இரண்டு சப்ஜெக்டில் அரியர்ஸ்'' என்றார்.

''ஏன்... சரியா படிக்க மாட்டேங்கிறாரா?'' என்றேன்.

''ஆமாம் மேடம். ராத்திரி 1 மணிவரை செல்போனை நோண்டிக்கொண்டிருந்தால் இப்படித்தான் ஆகும். காலேஜில் பேரன்ட்ஸ்–டீச்சர்ஸ் மீட்டிங் அப்போ நாங்க போயாகணும். குறிப்பா மார்க் ஷீட் கொடுக்கும்போது கண்டிப்பா நாங்க இருக்கணும்.''

''அப்படியா... என்ன பேசுவார்கள் அந்த மீட்டிங்கில்?''

''என்னத்தை சொல்ல மேடம். திட்டுதான்...''

''உங்கள் மகனுக்கா?'' என்றேன்.

''இல்ல மேடம். அப்பா, அம்மாவுக்குதான். பசங்க செல்போன் பயன்படுத்த அனுமதிக்காதீங்க... வீட்டுக்கு இரவு 8 மணிக்குள் வரச்சொல்லுங்க... அப்படி இப்படின்னு எங்களுக்கு அட்வைஸ். சொன்னா யார் கேட்கிறாங்க?''

மௌனமாக அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

''இவ்வளவு குறைவா மார்க் வாங்குறான் உங்கள் மகன். இனிமே இவனை படிக்க வைக்க வேண்டாம்... 'ஏதாவது எடுபிடி வேலைக்கு அனுப்புங்க...' என்று ஒரே திட்டுதான்.''

''ஐயையோ... பசங்க இதைக் கேட்டு மனசு உடைஞ்சு போயிடுவாங்களே!'' என்றேன் பதற்றமாக.

''அட, நீங்க வேற மேடம்... அதெல்லாம் நம்ம காலத்தோட போயாச்சு. புரொஃபசர் பேசப் பேச அவரை இவன் மொறைக்காத குறைதான். வெளியில் வந்ததும், 'ஏம்பா இப்படி நீயும் திட்டு வாங்கி, எங்களையும் திட்டு வாங்க வைக்கிறே'ன்னு கேட்டால், 'அப்பா... இதையெல்லாம் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுடணும். அவங்க என்னை மட்டுமா திட்டறாங்க? எல்லாரையும்தானே திட்டறாங்க...'ன்னு சொல்றான்.''



இந்தக் காலத்து இளைஞர்களை நினைத்து ஒரே ஆச்சர்யம்தான். ஒன்று, எதற்குமே கவலைப்படாமல் எல்லாவற்றையும் துடைத்தெறிந்துவிட்டு இப்படி விட்டேத்தியாக இருக்கிறார்கள். இல்லையெனில் முணுக்கென்றால் ரோஷம், கோபம், கொந்தளிப்பு, தற்கொலை என சென்றுவிடுகிறார்கள். இந்த இரண்டு மனநிலைகளுக்குமான இடைவெளி மிகக்குறைவுதான். யாராக இருந்தாலும் சமநிலை மனப்பக்குவம் அவசியம். அது இல்லையென்றால், நமக்குள் உண்டாகும் அழுத்தத்துக்கு ஏற்ப மனம் எப்படி வேண்டுமானாலும் முடிவெடுக்கும்.

நம் மனம் ஒரு ரோபோ மாதிரி. நாம் என்ன கற்றுக்கொடுக்கிறோமோ, அப்படி செயல்படும் அற்புத ஆற்றல் கொண்டது. நம் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே மனதை இயக்கும் ஆற்றலைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம்.

முன்பெல்லாம் 'நல்லது செய்தால் சொர்க்கத்துக்குப் போகலாம். தப்பு செய்தால் நரகத்துக்குத்தான் போகணும்' என்று சொல்லிச் சொல்லி வளர்த்தார்கள். இப்படிச் சொன்னவர்கள் யாரும் சொர்க்கத்தையோ, நரகத்தையோ பார்த்ததில்லை. ஆனாலும், கேட்டவர்கள் இதையெல்லாம் நம்பினார்கள். தங்கள் மனசாட்சிக்கு பயந்து நல்லவிதமாகவே நடந்துகொண்டார்கள்.



சொர்க்கம் என்பதை அமுதும் விருந்தும் கொண்டாட்டங்களும் நிறைந்த மகிழ்ச்சியான இடமாக கற்பனை செய்தோம். நல்வழியில் சென்றால் கிடைக்கும் வெகுமதி வாழ்க்கை அது. நரகத்துக்குச் சென்றால் கொதிக்கும் எண்ணெயில் முக்கி எடுப்பார்கள், பொசுக்கும் தீயில் தள்ளிவிடுவார்கள் போன்ற பயங்கரமான காட்சிகளை நினைத்து நடுங்கினோம். தீமை செய்தால் இதுவே தண்டனை என பயந்தோம்.

நாகரிகம் வளர வளர, அறிவியல் தெரிய தெரிய, மனிதன் எதற்கெடுத்தாலும் விதண்டாவாதம் செய்யக் கற்றுக்கொண்டான். விளைவு... முதுமை அடைந்த பாட்டிகள், மனவளர்ச்சியில்லாமல் தெருவில் திரியும் பெண்கள், அப்பாவியாக வீதிகளில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுமிகள் என சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களில் எல்லாம் தன் சுயலாபத்துக்குக் கணக்குப் பார்க்கும் கொடூரர்கள் பெருகிவிட்டார்கள்.

சமீபத்தில் 'புதிய தலைமுறை' இதழில் 'தூக்கு தண்டனை எப்படிக் கொடுக்கப்படுகிறது' என்பது குறித்து விரிவாக ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

'தூக்கிலிடப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக கைதியின் உயரம், எடை, தூக்குக்கயிற்றின் நீளம், உடல் தொங்கவிடப்படும் உயரம், கைதியின் கழுத்தின் சுற்றளவு இவற்றை அளப்பார்கள். கைதியின் கடைசி ஆசை, எதிர்பார்ப்புகள் குறித்துக் கேட்டு, அவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால் நிறைவேற்றுவார்கள். தண்டனை நாளன்று கைதியின் கைகளைப் பின்னால் கட்டி, முகமூடியால் முகத்தை மூடி தூக்கு மேடைக்கு அழைத்து வருவார்கள். தூக்கு மேடையில் கைதி முரண்டு பிடித்தால், இரு கால்களையும் சேர்த்துக் கட்டுவார்கள். பிறகு தண்டனையை நிறைவேற்றுபவர் லிவரை பிடித்து இழுக்க, மேடை தரைதளம் இறங்கும்...'

இப்படியாக அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், அயல்நாட்டுப் பயணம் போன்றவற்றுக்கான முன்னேற்பாடுகள் அனைத்துமே சுகமான அனுபவங்கள். ஆனால், மரணத்துக்கான முன்னேற்பாடுகளை ஒரு மனிதன் எதிர்கொள்வது எத்தனை கொடியது. 'மரணத்தின் வாசலுக்குச் செல்வது இத்தனை வேதனையான அனுபவமாக இருக்கும்' என முன்பே அறிந்திருந்தால், ஒரு வேளை தவறு செய்வதற்கு முன் யோசித்திருப்பார்களோ என அவர்கள் மீது சின்ன கழிவிரக்கம் தோன்றியது.

'நன்றாக படித்தால் நல்ல வேலைக்குப் போகலாம். கார், பங்களா என வாழலாம்' என்று சொர்க்கத்தைக் கற்பனை செய்யக் கற்றுக்கொடுக்கிறது இந்த சமூகம். 'தவறு செய்தால் என்ன தண்டனை கிடைக்கும். அது எத்தனை கொடூரமாக இருக்கும்' என்பதை சொல்லிக் கொடுக்கத் தவறுகிறது. இதனாலும் குற்றங்கள் பெருகுகின்றன.

மாணவர்களுக்கு நல்லவிதமாக வாழ அறிவுரை சொல்வதுடன், நல்ல குணநலன்கள் இல்லாவிட்டால் என்ன மாதிரியான தண்டனைகள் கிடைக்கும் என்பதற்கு இதுபோன்ற கைதிகளின் தண்டனைகள் குறித்து ஆசிரியர்கள் எடுத்துச் சொல்லி விவாதிக்கலாம்.

நேர்மறையான தகவல்களைப் பேசி நல்ல விஷயங்களை கற்றுக்கொடுப்பது ஒரு வழி. எதிர்மறையான தகவல்களையும் எடுத்துச் சொல்வதன் மூலம் நல்ல விஷயங்களை இன்னும் ஆழமாக குழந்தைகள் மனதில் பதியச் செய்வது மற்றொரு வழி. முன்னதைவிட பின்னது சீக்கிரம் கற்றுக்கொடுக்கும்.

சொர்க்கத்தின் கற்பனைகளைக் காட்டி வளர்ப்பது முக்கியம். 'நரகம் எப்படி இருக்கும்' என்பதை உணர்த்துவது அதைவிட முக்கியம். ●

## இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!

நேர்மறையாகப் பேசி நல்ல விஷயங்களை கற்றுக்கொடுக்கலாம். எதிர்மறையான தகவல்களையும் எடுத்துச் சொல்லி, நல்ல விஷயங்களை இன்னும் ஆழமாக உணர்த்தலாம்.



காம்கேர் கே.புவனேஸ்வரி